திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 6 ஜூன் 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு.ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

# கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 6
ஜூன் 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

இதழ்மணம் 191

அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள் (2) 193
பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்

அடைமொழிகள் 198
முனைவர் பெ.சுயம்பு

அன்பும் அருளும் 207
ம.ரா.போ.குருசாமி

திருக்குறளில் அறிவியல் கூறுகள் 215
முனைவர்.மெ.மெய்யப்பன்

கரும்பு அயிரக் கூலி கொடுக்கும் குலத்தோன்றல் 219

தமிழ் செவ்வியல் மொழி – இனி என்ன..... 221
பேராசிரியர் முனைவர் நா.இராமமூர்த்தி

செருத்துணையாரும் புகழ்த்துணையாரும்
அவதரித்த திருப்பதிகள். 223
திரு. சதாசிவபண்டாரத்தாரவர்கள்

தமிழும் மலையாளமும் 227
எஸ்.வையாபுரிப்பிள்ளை

# இதழ்மணம்

சிந்தனைக்கு விருந்தாகப் பேராசியர் ம.ரா.போ. குருசாமி அவர்களின் "அன்பும் அருளும்" என்னும் கட்டுரை இடம் பெறுகிறது. திருவள்ளுவர் வேண்டாமையை விழுச்செல்வமாகப் போற்றி உரைத்திருப்பதைத் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளார். *கண்டதைக்காமுறும்* ஆசை -ஆளுமை வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதை உளம்கொள்ளத்தக்க வகையில் கட்டுரையின்கண் ஆசிரியர் விளக்கியுள்ள திறம் கற்று இன்புறத்தக்கது. பொன்னும் பொருளுமே உலகம் என்று வாழும் நுகர்வுக் கலாச்சாரத்திற்கு இடையே அன்பும் அருளும் வேண்டத்தக்கது என்பதை ஆசிரியர் நினைவுபடுத்துவது நோய்க்கு மருந்தாகும்.

பேராசிரியர் இரா.அரங்கராசனின் அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் தொடரின் இரண்டாம் கட்டுரை இடம்பெறுகிறது. ஆழ்வார்களின் கவிதைகள் இயற்றமிழ் மட்டுமல்ல; அவற்றை முத்தமிழ் உணர்வுடையோரே முழுதுணரத் தக்கவர்கள் என்பதை ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளார். திருவரங்கத்தில் "செந்தமிழ்" பாடுவார் வீதியும் அங்கு இசைப்புலமை வாய்ந்த அரையர்கள் எழுநூற்றுவர் வாழ்ந்ததையும் ஆசிரியர் குறிப்பிடுவது நம்முன்னோர்களின் கலை நிறைந்த பெருவாழ்வைச் சிந்திக்கவும் மீண்டும் புதிய சமுதாயத்தைக் கலையும் கடவுள்காட்சியும் உடையதாகப் பார்க்க விரும்பும் அவர் உள்ளத்தின் வேட்கையையும் எழுச்சியையும் காட்டுகிறது.

திருக்குறளில் அறிவியல் கூறுகள் என்னும் பகுதியில் புலால் மறுத்தலில் உள்ள அறிவியல் நுட்பங்கள் குறித்துப் பேராசிரியர் மெ.மெய்யப்பன் எழுதுகிறார். மனிதன் சைவனே; அசைவன் அல்ல என்பதை அறிவியல் கண்கொண்டு வாசகர்களைப் பார்க்க வைக்கிறார். சைவர்கள் ஊக்கம் பெறலாம்; மகிழலாம். *அசைவர்கள் சிந்திக்கலாம்; தங்களை மாற்றிக்கொள்ளலாம். உடல்* நலம் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு இக்கட்டுரை பயனுடையதாக இருக்கும்.

பேராசிரியர் முனைவர் நா.இராமமூர்த்தி தமிழ் செவ்வியல் மொழி இனி என்ன, எனத் தலைப்பிட்டு இனியும் தூங்கவேண்டாம் செயல்படவேண்டிய தருணம் வந்தது என எழுதியிருப்பது தமிழ் ஆர்வலர்களிடையே முயற்சியின் வேகத்தை எதிர்பார்ப்பதாக அமைந்துள்ளது.

"அடைமொழிகள்" என்னும் தலைப்பில் பேராசிரியர் பெ.சுயம்பு இலக்கணம் குறித்த விரிவான கட்டுரை அளித்துள்ளார்கள். மொழி வரலாற்றுநோக்கில் தொல்காப்பியத்தில் செய்த, செய்யும் என்னும் பெயரெச்சங்கள் தொல் திராவிட மொழியின் இலக்கண அமைப்பின் தொடர்ச்சி என்பதை ஆய்வு அறிஞர்களின் பார்வைக்குக் கொண்டுவந்துள்ளது கருதத்தக்கதாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் இதழை நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழறிஞர்களின் இடைவிடாத முயற்சியால் திங்கள் இதழாக வெளியிட்டு வருகிறது. இவ்விதழைக் கண்ணுறும் அறிஞர்கள் இவ்விதழின் இன்றியமையாமையை நன்கு உணர்வர். இதன் வளர்ச்சிக்கு வாசகர்களிடையே ஆண்டுச்சந்தா சேர்க்கலாம்; ஆயுள் சந்தா சேர்க்கலாம்; ஒல்லும் வகை உதவுக. வாசகர் வட்டத்தை விரிவுபடுத்துக.

**உலகத் தமிழ்ச்சங்கங்களின் திருக்குறள் மாநாடு வாழ்த்துவோம்.**

சூலை 9-10,2005ல் வாசிங்டன் D.C.யில் பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு நடைபெறுகிறது. உலகெங்கிலும் உள்ள தமிழறிஞர்களும் திருக்குறள் ஆராய்ச்சியாளர்களும் பங்குபெறுகின்றனர். கட்டுரைச் சுருக்கங்கள் ஆகஸ்ட் 31,2004 ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

முதல் முகவரி

Dr.T.MURUGAVATHANAM
5,3rd Street Theni Road
Aravaazhi Nagar
Palkalai Nagar East
Madurai - 625 021.
E-mail: murugavathanam@hotmail.com

இரண்டாவது முகவரி

SORNAM V.SANKAR
5420, Autumn Field Court
Ellicott City, MD 21430
USA

மின்னஞ்சல் முகவரி: thirukkural2005@aol.com

# அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள் (2)

*(பேராசிரியர் முனைவர் இரா.அரங்கராஜன்)*

## இசையும் கூத்தும்

இயல் இசை நாடகம் என்ற மூவகைத் தமிழ்க் கூறுபாடுகளும் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் தாமாகவே இயல்பாக இடம் பெற்றுள்ளதைப் பல இடங்களில் பேருரையாளர் நம்பிள்ளை உணர்த்துகிறார். இயற்றமிழ் இலக்கணம் பொருந்தியதை முன்னர்க் கண்டோம். இசையும் கூத்தும் ஒருசேர இயைந்ததை இனிச் சிறிது காண்போம்.

திருவாய்மொழி ஆயிரமும் 'பண்ணார் பாடல் இன் கவிகள்' என்றும், 'பண் தலையிற் சொன்ன தமிழ்' என்றும் நன்கு உணர்ந்தே உரையிட்டவர் நம்பிள்ளை. அதனால், அவாவிலந்தாதியாகிய சடகோபரின்தமிழ் நிறம் கிளர்ந்த அந்தாதியாக அமைந்து இசை மாலைகளாகித் தொக்குக் கழித்த பலவின் சுளைபோல் இனிமைதானே வடிவெடுத்துத் திகழ்வதைப் பிறர்க்கு உணர்த்துவதைத் தம்முடைய கடப்பாடாகக் கருதினார் அவர்.

'ஆழ்வாருடைய அருளிச்செயலைப் பண்ணிலே ஏற்றி இசைக்கவல்லவரே கேசவன்தன் அடியாராகுவர்' என்ற முடிவைக் கொண்டிருந்தவர் நம்பிள்ளை.

'இசையொடும் பண்ணில் பாடவல்லார் அவர் கேசவன் தமரே' (திருவாய் மொழி 2-6-11) என்ற ஆழ்வார் திருவுள்ளத்தை அடியொற்றியே அங்ஙனம் முடிவுகொண்டார்.

திருவாய்மொழியை முழுதுமாக நுகர்தற்குத் தக்கோர் பாலேய் தமிழராய் இசைகாரராய்ப் பத்தராயும் உள்ளவரே என்பதும் சடகோபரின் திருவுள்ளக் கிடக்கையாகும்.

அதாவது, இயற்றமிழும் இசைத்தமிழும் பத்தி உணர்வும் கூடிய ஒரு பசுங்கூட்டே திருவாய்மொழியை நுகர்தற்குத் தேவையான தகுதி என்பதை உணர்ந்தே உரைவரைந்து செல்வர் நம்பிள்ளை.

ஈட்டில் வரும் சில இசை நுட்ப உரைக்குறிப்புக்களைக் காணில் நம்பிள்ளை தமிழ்ப்பண்ணிசைகளில் நல்லறிவு வாய்க்கப் பெற்றிருந்தார் என்று அறியலாகும். இவ்வறிவினை அவர் எவ்வாறு கைவரப்பெற்றார்?

திருவரங்கம் பெரியகோயிலில் பணியாற்றிய அரையர்கள் மூலம் அவர் தமிழ்ப்பண்ணிசைகளில் நல்லறிவு கைவரப் பெற்றார்.

நம்பிள்ளைக்கு முன்பாகத் திருவரங்கம் பெரியகோயிலில் அருளாட்சி செய்துவந்த இராமாநுசரும் ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையரிடம் திருவாய்மொழியைப் பண்ணிசையோடு முறையாகக் கற்றுத் தேர்ந்தார் என்றும்; அத்தகைய இசைப்புலம் வாய்ந்த அரையர்கள் எழுநூற்றுவரைச் செந்தமிழ்ப் பாடுவார் வீதியில் (இக்காலத்து கீழை உத்தரவீதி) குடியமர்த்தியிருந்தார் என்றும்; அவர்களில் பலரை ஆங்காங்குள்ள திருமால் திருத்தலங்களில் இசைப் பணியாற்றுமாறு நியமித்திருந்தார் என்றும் பிள்ளைலோகஞ்சீயர் என்ற பெரியார் தாமியற்றிய 'இராமாநுஜார்ய திவ்ய சரிதை' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாசுரங்கள்

திருவாய்மொழிப் பாடல்களில் ஆழ்வார் அகத்தே ஓடுகின்ற உணர்ச்சிகளை இசை கொண்டே காண முடியும் என்பதும் நம்பிள்ளையின் ஓர் அடிப்படைக் கோட்பாடு.

ஆழ்வாருடைய பாடல்கள் வெறும் புலமையின் வெளிப்பாடன்று; இறையருளின் புலப்பாடாகும். இதனை உணரத் திருவாய்மொழிப்பண்கள் உதவுகின்றன. இதனை ஈட்டுரையின் உரைப்பாயிரத்தில் உரையாசிரியர் தெளிவுறுத்துகிறார். மணிப்ரவாள நடையில் அவர் இவ்வாறு மொழிகிறார்:

"பகவத் ப்ரஸாத லப்தமான திவ்ய சக்ஷுர் மூலமாகப்
பிறந்தன என்னுமிடம் ஸ்வர வசனவ்யக்திகளாலே
அறியலாம்"

இதன் தமிழாக்கம்

"இறைவன் திருவருளால் பெறப்பட்டதான தெய்விகத்

திருக்கண்பார்வை மூலமாகப் பிறந்தன என்னுமிடம்
இசைகொண்டும் இயல்கொண்டும் அறியலாம்"

திருவாய்மொழிப் பாட்டுக்கள் பாசுரங்களாக, அதாவது ஸ்வரத்தோடு கூடிய செய்யுட்களாக விழுந்தமைக்கும் நம்பிள்ளை ஒரு காரணம் காட்டுகிறார். அஃது வருமாறு:

"ஆற்றாமையாலே துடித்த துடிப்பு ஆடல் ஆனாற்போலே
ஆற்றாமையாலே கூப்பிட்ட கூப்பீடும் பாடலாய் விழா
நின்றது."

அவ்வாறு விழுந்த பாடல்கள் 'பாசுரங்கள்' என்று போற்றப்பெறுகின்றன. ஸ்வரத்தோடு கூடின பாக்கள் என்று பொருள்.

வினையெச்சமா? வியங்கோளா?

தலைவியாக மாறிய ஆழ்வார் தலைவனாகிய திருமாலைக் குறித்துச்சில குயில்களை தூதுபோக்குவதற்காக அவற்றை அழைக்கிறார்.

போற்றி யான் இரந்தேன் புன்னைமேலுறை பூங்குயில்காள்
சேற்றில் வாளை துள்ளும் திருவண் வண்டூர் உறையும்
ஆற்றலாழியங்கை அமரர்பெருமானைக் கண்டு
மாற்றம்கொண்டு அருளீர் மையல் தீர்வதொருவண்ணமே

(திருவாய்மொழி 6-1-6)

இங்கு, போற்றி என்ற சொல் வினையெச்சமாகத் தோன்றும். ஆனால் நம்பிள்ளை அதனை வியங்கோளாகக் கொண்டு பூங்குயில்களை வாழ்த்துவதாக உரையிட்டார். போற்றி - வாழ்க!. என்று பொருள்; அதாவது வியங்கோள் வினைமுற்று. இப்படி வாழ்த்துவதையும் மிக உரத்த குரலில் உயர்த்தி வாழ்த்தினாளாம் தலைவி "புன்னையிலே தன் ஆர்த்த த்வநி (துயரக்குரல்) படும்படி உயரப் 'போற்றி' என்கிறாள்" என்பது ஈடு.

இப்படி உரையிட்டதற்குக் காரணம் கூறும்போது, "இவ்வர்த்தத்துக்கு நிர்ணாயகம் இசையாயிற்று" என்று தெரிவிக்கிறார். நட்டராகப் பண் தாளம் ஏழொத்து என்ற

இசையமைப்பின்படி 'போற்றி' என்பது வியங்கோளாக நீண்டு உச்சரிக்கப்பட்டது என்பதை இசைப்புலவர்கள் ஆராய்தல் வேண்டும்.

அந்தோ முடிந்தேன்!

திருவாய்மொழியில் பாமரு மூவுலகு (7-6) என்ற பதிகத்தில் ஆழ்வார்க்கு ஆற்றாமை அளவிறந்து செல்கிறது. அந்நிலையில்,

என்று கொல் சேர்வது அந்தோ
அரன் நான்முகன் ஏத்தும் செய்ய
நின் திருப்பாதத்தை யான்
நிலம் நீர் எரிகால் விண் உயிர்
என்றிவைதாம் முதலா முற்றுமாய்
நின்ற எந்தாயோ!
குன்றெடுத்து ஆநிரை மேய்த்து
அவை காத்தளம் கூத்தாவோ!

(திருவாய்மொழி 7-6-2)

"என்றுகொல் சேர்வது அந்தோ!" என்று ஆழ்வார் ஆற்றாமையின் உச்சியில் துடிக்கிறார். இங்கு 'அந்தோ' என்ற சொல்லுக்கு 'நான் முடிந்தேன்' என்று நம்பிள்ளை உரையிடுகிறார். 'ஸ்வரம்' கொண்டு அங்ஙனம் உரை நிருவகித்ததாக அப்பகுதியின் அரும்பதவுரையில் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்வரபாவம்

'அஞ்சிறைய மடநாராய் (1-4-1) என்ற பதிகத்தில், தலைவி நாரையின் கால்களில் விழும்போது, 'நாராய்' என்ற இசை நீட்சியை நுனித்துணர்ந்து, சிறு குழந்தை ஒன்று அன்பின் மிகுதியால் தாயின் அருகே சென்று 'அம்மே' என்று அரவணைப்பதைக் கண்டு வெளிப்படுத்துகிறார். இதனை ஸ்வரத்தின் பாவம் அதாவது குறிப்பு என்று விளக்கியுள்ளார்.

தாளத்தின் குறிப்பு

ஸ்வரம் மட்டுமின்றித் தாளம் கொண்டும் சிலபோது

ஆழ்வாரின் ஆற்றாமையை அதன் மிகுதியை அறியவேண்டியிருக்கும்.

'ஆடியாடி அகம் கரைந்து' (2-4) என்ற பதிகத்தில் தலைவியின் தளர்ச்சியைத் திருத்தாயார் வருணிக்கிறார்.

ஆடியாடி அகங்கரைந்து, இசை
பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும்
நாடிநாடி நரசிங்கா என்று
வாடிவாடும் இவ்வாள் நுதலே (திருவாய்மொழி 2-4-1)

(ஒளி பொருந்திய நெற்றியினையுடைய இவள், நின்ற இடத்தில்
நில்லாமல் பல இடங்களிலும் உலாவி மனமும் கரைந்து,
இசையோடு பலகாலம் பாடிக்கொண்டு கண்களில் நீர்
நிறையப் பெற்று எல்லா இடங்களிலும் தேடித்தேடி,
'நரசிங்கனே!' என்று மிகவும் வாடுகிறாள்)

முதற்கண் வரும் 'ஆடிஆடி' என்ற அடுக்குத் தொடரின் உள்ளே தலைவியின் தளர்ச்சி வெளிப்பட்டிருப்பதை உரையாசிரியர் காட்டுகிறார். முதலில் வரும் 'ஆடி' என்ற சொல் மிகமெல்லிதாக உச்சரிக்கப்படும் போதுதான் தலைவியின் தளர்ச்சி காணப்படும். ஈண்டு ஈட்டில், "முதல் 'ஆடி' என்கிறதிற்காட்டிலும் இருகால் மட்டு 'ஆடி' என்றதில் அவஸாதத்தின் மிகுதி தாளங்கொண்டு அறியுமித்தனை" என்று உரைக்குறிப்பு வருகிறது. "தாளம் கொண்டு அறியுமித்தனை என்றது, வெண்கலத்தின் ஒலி போன்று ஒரு காலுக்கு ஒரு கால் ஒய்ந்துவருகிறது என்படி" என்று விளக்கம் அளிக்கிறார். ஈட்டின் தமிழாக்கவாசிரியர் பு.ரா.புருஷோத்தம நாயடு அவர்கள். "இருகால்மட்டு" என்றால் கைகளில் தாளம் கொண்டு ஒலி எழுப்புவோர் இடையில் இரண்டுநாதம் விட்டுத் தட்டும்போது தாளத்தின் ஓசை இழைந்து ஓடும் நிலையாகும். 'இரண்டாம் முறை ஒரு தாளம் ஏறியிருக்கும்' என்பர் அரும்பதவுரைகாரர். இவற்றைப் பண்ணிசைத்தாள ஆராய்வாளர்கள் மேலும் ஆராயத்தகும்.

(தொடரும்)

# அடைமொழிகள்

*பேராசிரியர், முனைவர். பெ.சுயம்பு*
திருச்செந்தூர்.

அடைமொழிகள் தம்மளவில் முற்றுப்பெற்ற கருத்தினை உணர்த்துதல் இல்லை. இவை பெயர் அல்லது வினைமுற்றுக்களைச் சார்ந்து வருகின்றன. பெயர் அல்லது வினைச் சொற்களைச் சார்ந்து, அவற்றை விவரிப்பதாக அமைகின்றன. எனவே இம்மொழிகள் பயன்பாட்டளவில் தொடர்க்கூறுகளாகக் கருதப்படுகின்றன.

அடைமொழிகளைத் தமிழ் இலக்கண நூல்கள் எச்சவினைகள் எனக் குறிப்பிடுகின்றன. பெயருக்கு அடையாக வருவன பெயரெச்சங்கள். வினைக்கு அடையாக வருவன வினையெச்சங்கள். இவ்விரு வகைகளும் வினையடியிலிருந்து உருவாகின்றன.

பெயரெச்சம், வினையெச்சம் தவிர பெயரடை (adjective), வினையடைச் (Adverb) சொற்களும் அடை மொழிகளே. இவை குறித்துத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற தமிழ் மரபிலக்கண நூல்கள் விவரிக்கவில்லை. எனினும், குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம் என்னும் இலக்கணச் சொல்லாட்சிகள் முறையே பெயரடை வினையடைகளில் சிலவற்றை உணர்த்துவனவாகும். மேலும், தொன்னூல் விளக்கம், செந்தமிழ், கொடுந்தமிழ், கிலாவிஸ் போன்ற வீரமாமுனிவர்களின் நூல்களிலும் கால்டுவெல், ஆர்டன் போன்ற பிற மேலை நாட்டாரின் நூல்களிலும் பெயரடை, வினையடைகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்விவரிப்பு மேலை நாட்டு மொழி மரபின் தாக்கத்தால் ஆனது. இத்தாக்கம் மேலும் ஒரு புதிய விளக்கத்தையும் தமிழில் புகுத்தியுள்ளது. உரிச்சொற்களை அடைமொழிகளாகக் கருதி, பெயர் உரிச்சொல், வினையுரிச்சொல் என ஒருசாரார் வழங்குதலே அப்புதுமை.

அமைப்பு

பெயரெச்சம், பெயரடை இரண்டும் பெயருக்கு அடையாக வருவன. எனினும் இரண்டின் சொல் அமைப்பில் வேறுபாடு உளது.

பெயரெச்சம் வினையடியாகப் பிறக்கும். ஆனால் பெயரடைகள் பலவாறு பிறக்கின்றன.

1. பெயர்ச்சொல்லே பெயரடையாதல்
   கண்பார்வை, மலையருவி, மதிமுகம், வாளைமீன்
   வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத் தொகைளில் இவ்வகை அடைகள் வருகின்றன.
2. வினைப் பகுதிகள் பெயரடையாதல்
   சுடுசோறு, அலைகடல் இவ்வமைப்பு வினைத்தொகை எனப்படும்.
3. பண்புச் சொற்கள் பெயரடையாதல்

   வெண்சோறு, வெள்ளைக்குதிரை, கரிய பானை, நல்ல பாம்பு, வட்டப் பலகை, குறுவாள்
4. இடைச் சொற்கள் பெயரடையாதல்
   மற்றப் பையன் பிறமொழிகள்
5. உரிச்சொற்கள் பெயரடையாதல்
   உறுபசி, கடுவேகம்
6. மூவிடப் பெயர்கள் பெயரடையாதல்
   என் வீடு, உன் மகன்
7. எண்ணுப் பெயர்கள் பெயரடையாதல்
   இரண்டு நாடுகள், ஓர்வீடு, மும்மணிகள்
8. சுட்டுச் சொற்கள் பெயரடையாதல்
   அப்பெண், அந்த மனிதன், இத்தனை நாள்
9. வினாச் சொற்கள் பெயரடையாதல்
   எவ்வூர் எந்தப்பெண் எத்தனைப்பேர்

10. ஆன, ஆகிய, இய என்னும் சொற்கள் பெயருடன் சேர்ந்து பெயரடையாதல்.

கருப்பான மாப்பிள்ளை, சிவப்பாகிய துணி, அழகிய பெண்

தொடரமைப்பிலும் இரண்டும் வேறுபடுகின்றன.

1. பெயரடைக்குப் பெயரெச்சம் அடையாக வரும். ஆனால் பெயரெச்சத்திற்குப் பெயரடை அடையாக வராது.

வந்த நல்ல பையன்

நல்ல வந்த பையன் என வராது.

2. பெயரெச்சத்திற்கு வினையெச்சமும் வினையடையும் அடையாக வரும். ஆனால் பெயரடைக்கு இவை அடையாகா.

ஓடி வந்த பையன், வேகமாக வந்த பையன்

ஓடிப் பெரிய குதிரை, மெதுவாக நல்ல பெண் என வருதல் இல்லை.

வரலாறு:

தொல்காப்பியம் செய்த, செய்யும் என்னும் இருவகை அமைப்புள்ள பெயரெச்சங்களைக் கூறுகிறது. இவற்றுள் செய்த அமைப்புச் சொற்கள் இறந்த காலத்தில் வழங்குவன, 'செய்யும்' சொற்கள் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் (இறவாக்காலத்திற்கும்) பொதுவானவை.

தொல்காப்பியம் விவரிக்கின்ற இவ்விருவகைச் சொற்களே தொல்திராவிட மொழியின் அமைப்பாகக் கருதப்படுகின்றன.

சங்ககாலத்தில் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூவகைச் சொற்கள் வழங்கின. இவை முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வுக் காலங்களுக்கு உரியன.

சேர்கின்ற கண்கவின் (பரிபாடல் 22)

செய்கின்ற வாய்பாட்டுச் சொல் ஒன்று மட்டுமே பரிபாடலில் இடம்பெற்றுள்ளது. எனவே நிகழ்காலத்திற்கு எனத் தனி வகைச்

சொல் சங்க காலத்தின் பிற்பகுதியில் தோன்றி, பிற்காலங்களில் பெருகலாயிற்று எனலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை பதினெண் கீழ்க்கணக்கு, பக்தி இலக்கியங்களில் நிகழ்காலப் பெயரெச்சங்களின் வழக்கு மிகுதியாகக் காணப்படுகிறது.

உருள்கின்ற (சிலப்பதிகாரம் 29)
சாதிக்கிற (மணிமேகலை 29)
சோர்கின்ற பொன்வண்ணம் (திணைமொழி ஐம்பது 19)
உரைக்கின்ற திசைமுகன் யானே (திவ்வியப்பிரபந்தம் 2586)
திகழ்கின்ற திருமார்வில்
புகழ்கின்ற புள்ளூர்தி (திவ்வியப் பிரபந்தம் 3137)

செய்கின்ற என்னும் சொற்களே அன்றிச் செய்கிற என்னும் புதிய சொல்வகையும் மணிமேகலையில் நிகழ்காலப் பெயரெச்சமாக வழங்குகிறது. மேலும், 'செய்யாநின்ற' வாய்பாடும் நிகழ்காலத்தில் குறளில் வந்துள்ளது.

இறவாநின்றவளை (குறள் 1157)

நிகழ்காலத்திற்கு எனத்தனிவகைச் சொற்கள் வழங்கிய நிலையில் செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் எதிர்காலத்தில் வழங்குதற்கு உரியன என்னும் வரையறைக்குள் ஒடுங்கலாயின.

இடைக்காலத்தில் இறப்பு, நிகழ்வு, எதிர்வுக் காலங்களுக்கு எனத் தனித்தனிச் சொற்கள் தெளிவாக வழங்கின. இதனை இலக்கியங்களே அன்றி, இலக்கண நூல்களும் எடுத்துரைக்கின்றன.

வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் செய்த, செய்கின்ற, செய்யும் வாய்பாட்டுச் சொற்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவையே அன்றி, தொல்காப்பிய உரையாசிரியர்களும் வைத்தியநாத தேசிகர் போன்ற உரையாசிரியர் சிலரும் செய்யாநின்ற, செய்யாக்கிடந்த செய்யாவிருந்த வாய்பாட்டுச் சொற்கள் பெயரெச்சமாக வருதலையும் குறிப்பிடுகின்றனர். இவை பெருவழக்கில் பயிலாதவை.

நிகழ்காலப் பெயரெச்ச வாய்பாடுகள் யாவும் உறழ்ச்சியில் வரத்தக்கவை.

இக்காலத் தமிழில் செய்த, செய்கிற, செய்யும் சொற்கள் மூன்றும் இறப்பு, நிகழ்வு, எதிர்வுக் காலங்களில் முறையே வழங்குகின்றன. இவற்றுள் நிகழ்காலச் சொற்களாக எழுத்து வழக்கில் 'செய்கிற' பயின்று வருகிறது. செய்கின்ற என்பது அரிதாகக் காணப்படுகிறது. பேச்சு வழக்கில் செய்கிற வாய்பாட்டின் திரிந்த வடிவங்கள் (செய்ற, வர்ற, கேக்ற என்பன போல்வன) வழங்குகின்றன.

பெயரடைகளைப் பொறுத்தவரையில் சங்ககாலம் முதலாகப் பல்வேறு வகைச் சொற்கள் காணப்படுகின்றன. இவற்றில் மாற்றம் குறிப்பிடத்தக்கதாக இல்லை. இடைக்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள பெயரடைகளுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம்:

நீள் நிலா முற்றம் (திவ்வியப் பிரபந்தம் 1659)
சந்த மலர்க் குழலாள் நந்தன் மதலை
(திவ்வியப் பிரபந்தம் 1912)

நீள்நிலா முற்றம், சந்த மலர்க் குழலாள் என்பவற்றில் அடைகள் அடுக்கி வந்துள்ளன. இந்த அடுக்கு முறை பண்பு, சினை, முதல் (வண்ணச் சினைச்சொல்) என்னும் தொல்காப்பிய நெறிக்கு இயைபானது. இந்த இயைபினையே எல்லாக் காலத்துத் தமிழிலும் காணமுடிகிறது.

சீத்தலைச் சாத்தனார்; முறுக்குமீசை முருகன்,
ஒற்றைக் கண் சுப்பையா, எனத் தமிழ் மரபு இந்நாள் வரையிலும் நிலைத்துள்ளது.

### வினையடை மொழிகள்

#### அமைப்பு

வினைச்யெச்சம், வினையடை இரண்டும் வினைக்கு அடையாக வருவன. எனினும் இவற்றின் சொல்லமைப்பில் வேறுபாடு உளது.

வினைச்யெச்சங்கள் வினையடியாகப் பிறக்கின்றன. வினையடைகளோ பலவழிகளில் பிறக்கின்றன.

1. பெயர்ச் சொற்களுடன் ஆக, ஆகி, ஆய் என்பன இணைந்து வினையடையாதல்
   வேகமாக ஓடினான், ஆவியாகிப் போயிற்று, மரமாய் நின்றான்.
2. சுட்டுச் சொற்கள் வினையடையாதல்
   அங்குப்போ. அப்படிப்பேசாதே. இவ்வளவு கேள்.
3. வினாச்சொற்கள் வினையடையாதல்
   எங்குச் சென்றான். எவ்வாறு சொன்னான். எப்படிச் சொல்லலாம், எவ்வளவு கேட்டான்.
4. பண்புச் சொற்கள் வினையடையாதல்
   நன்கு பேசினாய்; சிறிது கேள்
5. உரிச்சொற்கள் வினையடையாதல்
   சாலப் பேசினான், நனிக்கேட்டான்
6. காலச்சொற்கள் வினையடையாதல்
   இனிச் சொல், இன்று போனான்
7. பின், முன், போது, கால் போன்ற சொற்கள் பெயரெச்சத்துடன் இணைந்து பெயரடையாதல்.
   வந்தபின் போ, வருமுன்செல், வந்தக்கால் கண்டேன். வந்தபோது இருந்தேன்.

## வரலாறு

வினையெச்சங்கள் தமிழ்த்தொடரில் பெரும்பங்கு வகிக்கின்றன. இவற்றின் பரவலான பெருவழக்குக் காரணமாக இவை பல்வேறு வாய்பாடுகளில் காணப்படுகின்றன.

தொல்காப்பியம் செய்து, செய்பு, செய்யு, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர், செயற்கு, செய்யா என வினையெச்சச் சொற்களை வாய்பாடாக அமைத்து விவரிக்கிறது. இவை தவிர பின், முன், கால், கடை போன்ற சொற்களையும் வினையெச்சம் எனக் குறிப்பிடுகிறது. இச்சொற்கள் யாவும்

பெயரெச்சச் சொற்களுடன் இணைந்து, வினையடைகளாக வரத்தக்கன.

செய்தென வாய்பாட்டுச் சொற்கள் செய்து + என என்னும் இரு எச்சங்களின் கூட்டுவடிவமாகும். செயல் என்னும் தொழிற் பெயரும் நான்காம் வேற்றுமை உருபு குகரமும் இணைந்த சொல்லே செயற்கு ஆகும்.

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய, செயின், செய்யிய, செய்யியர் என்பனவற்றில் முறையே உ, பு, ஆ, ஊ, அ, இன், இய, இயர் என்பன வினையெச்ச விகுதிகளாகும். செய்து, செய்யா, செய்யூ என்பன இறந்தகாலத்திலும் செய நிகழ்காலத்திலும் வருகிற வினையெச்சங்களாகும். செயின், செய்யிய, செய்யியர் ஆகியன குறித்து வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சேனாவரையர் இச்சொற்கள் நிகழ்காலத்திலும் தெய்வச் சிலையார் மூன்று காலங்களிலும் வரும் எனக்கூறுகின்றனர். நச்சினார்க்கினியரோ இறந்தகாலத்திலும், எதிர்காலத்திலும் வரும் என்று கூறுகிறார்.

நன்னூலில் செய்வான், செய்பான், செய்பாக்கு ஆகிய சொற்களும் கூறப்படுகின்றன. இவை தவிர இகர விகுதியும் யகர விகுதியும் வினையெச்சங்களாக இறந்த காலத்தில் வருகின்றன. இவை இறந்த கால இடைநிலைகளாகும். இவை வரும் சொற்களில் வினையெச்சத்தை உருவிலி உருபன் உணர்த்துகிறது. வான், பான், பாக்கு என்பவற்றில் வகரமும் பகரமும் எதிர்கால இடைநிலைகளாகும். ஆன் வினையெச்ச விகுதி, பான்+கு என்பதே பாக்கு என அமைந்துள்ளது. குகரம் நான்காம் வேற்றுமை உருபாகும். ஆன் அமைந்த சொற்கள் மலையாளாத்திலும் உள்ளன. வான் முதலிய மூன்றும் நோக்கப் பொருளை உணர்த்துகின்றன.

செயின் வாய்பாட்டுச் சொற்கள் நிபந்தனைப் பொருளில் வழங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியப் பட்டியலுடன் மேலும்

புதிய சில வரவுகளும் காணப்படுகின்றன. இ, ய், வான், பான், ஆல், ஏல், மல், மை, உம், ஆயின் என்பனவும் வினையெச்ச விகுதிகளாகும்.

நோக்கி (நற்றிணை 298) போய் (கலித்தொகை 148)
நீக்குவான் பாய்வாள் (பரிபாடல் 7)
காண்பான் யான் தங்கினேன் (கலித்தொகை 97)
என்றால் (கலித்தொகை 97)
திறன் உண்டேல் உரைத்தைக் காண் (கலித்தொகை 38)
உரையாமல் பெருகற்பின் (கலித்தொகை 77)
துவ்வாமை வந்தக்கடை (கலித்தொகை 22)
நனவிற் புணர்ச்சி நடக்கலும் (கலித்தொகை 39)
அற்றாராயினும் ஆண்டு வாழ்வோரே (புறநானூறு 26)
கண்டனிராயின் (அகநானூறு 130)
காணாவாய் (கலித்தொகை 13)
உணராவாகி (நற்றிணை 326)
கொள்ளாவாக (புறநானூறு 116)

வினைமுற்றுக்களும் வினைப்பகுதியுடன் செய வாய்பாட்டுச் சொல் இணைந்த வடிவங்களும் வினையெச்சமாக வழங்குகின்றன.

தன்னை அறியாது சென்றேன் (கலித்தொகை 51)
காண்வர (அகநானூறு 40)
அழிதக (அகநானூறு 40)

பதினெண் கீழ்க்கணக்கில் செயில், செய்தால், செய்யாமல், செய்யாமை வாய்பாட்டுச் சொற்களும் வான், பான், பாக்குச் சொற்களும் வருகின்றன.

காணில் (சிறுபஞ்ச மூலம் 25)
ஈர்க்கில் (நாலடியார் 26)
அறிந்தால் (ஏலாதி 37)
உரைத்தால் (சிறுபஞ்சமூலம் 23)
வராமல் (திரிகடுகம் 77)
ஆகாமல் (ஏலாதி 24)
அஞ்சாமை (ஏலாதி 27)
கொள்வான் (பழமொழி 89)

உண்பான் (பழமொழி 326)

தருபாக்கு (கைந்நிலை 11)

பல்லவர் காலத்தும் அதனைத் தொடர்ந்து வருகிற காலங்களிலும் செய்யிய, செய்யியர், செய்யூ, செய்தென வாயபாட்டு எச்சங்கள் அருகிவிட்டன. னகர ஈற்றின் இடத்தை லகர ஈறு கைப்பற்றி விட்டது. மல், மே, ஆ, ஆய், ஏல், ஏ விகுதிகள் வினையெச்சத்தை உணர்த்துகின்றன.

அழுந்தாமே பவமாயங் காத்தென்னை

(திருவாசகம், திருத்தெள்ளேணம் 4)

கோவணமாச் சாத்தினான்

(திருவாசகம், திருச்சாழல் 2)

தக்கது அறிதியேல் சந்திரா சலம் செய்யாதே

( திவ்வியப்பிரபந்தம் 57)

தாரியாதாகில் தலை நொந்திடும்

(திவ்வியப்பிரபந்தம் 148)

இருக்குமிடம் நாடுதிரேல் (திவ்வியப்பிரபந்தம் 329)

நின்னை அல்லால் அறியாது நான் அஞ்சுவன்

(திவ்வியப்பிரபந்தம் 433)

உருகுவித்தால் (அப்பர்தேவாரம் 3016)

விடில் (அப்பர்தேவாரம் 72)

ஆக, ஆறு என்பன ஆ என்றாகியுள்ளன. ஆமல் என்னும் எதிர்மறை விகுதி ஆமே என வருகிறது. பேச்சு மொழியின் செல்வாக்கினால் இவை பக்தி இலக்கியங்களில் வந்துள்ளன.

பிற்காலத்தில் செய்த, செய, செய்தால், செய்யாமல் வாய்பாட்டுச் சொற்களும் இகர, யகர ஈற்றுச் சொற்களுமே பயின்று வருகின்றன.

# அன்பும் அருளும்

*பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி*

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃது ஒப்பது இல்.

என்பது திருக்குறளின் தீர்ப்பு. இந்த உலகத்திலே இம்மை வாழ்விலே விரும்பாமை (எதனிடத்தும் ஆசை கொள்ளாமை) போன்ற உயர்ந்த செல்வம் எதுவுமில்லை; இங்கென்ன, எங்குமே அதுபோன்ற செல்வம் கிடையாது.

தூண்டுதல் (Motivation) இல்லாமல் எந்தத் துறையிலும் முன்னேற்றமோ வளர்ச்சியோ கிடையாது. தூண்டுதல் என்பது ஏதோ ஒன்றை அடையவேண்டும் என்னும் ஆசையால் எழுவது. எனவே, வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆசை தேவைப்படுகிறது. ஆனால், வள்ளுவர் ஆசையின்மைதான் உயர்ந்த செல்வம் என்கிறார். இந்தக் கருத்து வியப்பூட்டுகிறது. தவறாக இருக்குமோ என்ற ஐயம்கூட எழுகிறது. ஆனால், சொன்னவர் வள்ளுவர் என்னும்போது, தயங்கவேண்டியுள்ளது.

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.' என்று அவரே கூறியதை முன்னிறுத்தி, 'ஆசை இல்லாமையே உயர்ந்த செல்வம்' என்ற கருத்தை மெய்ப்பொருள் ஆகாது என்று மறுத்துவிடத் தோன்றுகிறது.

தாய்மடியில் தவழும் குழந்தை தரையில் நடக்கவேண்டுமாயின் உந்துதல், தூண்டுதல், ஆசை கொண்ட முயற்சி தேவைப்படுகிறது. பள்ளியில் சேர்ந்து அகரம் பயில்பவன் அறிவரங்கிலே ஓங்கிய சிறப்பினைக் கொண்ட பட்டங்கள் பெறுவதற்கு ஆசை இல்லாமல் முடியுமா? தூண்டுதல் சார்ந்த முயற்சி இல்லாமல் எங்கேதான் வளரமுடியும்! திருவள்ளுவர் ஏன் இப்படி ஒரு கருத்தைச் சொன்னார்?

'ஆசை' என்பதற்குத் 'திசை' எனவும் ஒரு பொருள் உண்டு. திசைகளையே விழுங்கும் அளவுக்கு ஆசை விரியக்கூடியது என்பதனால், அந்தச் சொல்லுக்கு இவ்வாறு இரண்டு பொருளும்

அமைத்தார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆசைக்கு ஓர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெலவே நினைவர்; அளகேசன் நிகர்
அம்பொன் மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற்பம் தேடி
நெஞ்சுபுண் ஆவர்

என்கிறார் தாயுமானவர். நிலமெல்லாம் தன்வசங்கொண்டு ஆளுகிறவனும் 'கடல்மீதும் நம் ஆணை செலுத்தவேண்டும்' என்று ஆசைப்படுவான்; குபேரன் போலவே கொள்ளை கொள்ளையாய்த் தங்கம் குவித்து வைத்திருந்தாலும், எதனையும் பொன்னாக்கும் ரசவாத வித்தை வல்லாரைத் தேடி அலைவார்கள்; தொண்டு கிழமாய்த் தளர்ந்து நெடுங்காலம் வாழ்ந்தவர்களும்கூடக் 'காயகற்பம்' கிடைக்காதா, இன்னும் இன்னும் நெடிய ஆயுள் பெற்று வாழ மாட்டோமா என்று எண்ணி எண்ணி மனம் புண்ணாவார்கள்........... எப்படிப் பார்த்தாலும் ஆசைக்கு ஓர் அளவில்லை. இதைவிட மனிதகுலத்தின் ஆசை வெறியை எப்படித்தான் விளக்கிவிட முடியும்?

ஆனாலும், ஆசைப்படுவது பாவமா என்ற கேள்வி நம் மனத்திலே இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

சித்தார்த்தனைப் புத்த பெருமானாக ஆக்கியது எது? மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை மகாத்மா காந்தியடிகளாக ஆக்கியது எது? வக்கீல் சிதம்பரம் பிள்ளையை கப்பலோட்டிய தமிழனாக ஆக்கியது எது? அவர்கள் உள்ளத்திலே தோன்றிய ஏதோ ஒரு தூண்டுதல்தானே காரணம்? ஏதோ ஒரு தூண்டுதலில் ஓர் உந்துதல்தான் அவர்களுடைய வாழ்க்கையைத் திசை மாற்றியதோடு, ஆளுமையின் தரத்தையும் உயர்த்தியது. உயிரினங்களைத் துன்பத்திலிருந்து நீக்க வேண்டும் என்ற 'ஆசை' தான் சித்தார்த்தனைப் புத்தராக்கியது; பாரத நாட்டு

விடுதலைகண்டு, அதன் வழியாகப் புவிக்கு ஒரு புதிய போராட்ட நெறியை - பகையுணர்வற்ற சத்தியாக்கிரகச் சத்திய நெறியை நாட்ட வேண்டும் என்ற 'ஆசை'தான் பாரிஸ்டர் காந்தியை மகாத்மா காந்தி ஆக்கியது; வெள்ளையன் வாணிக அரசியலால் நலிவுறும் பாரத நாட்டவரின் பொருளாதார அரசியல் வளவாழ்வு காணும் 'ஆசை'தான் வழக்கறிஞர் சிதம்பரனாரைக் கப்பலோட்டிய தமிழன் ஆக்கியது.

இந்த 'ஆசை' தோன்றியவுடனேயே புத்தராக - மகாத்மாவாக- கப்பலோட்டிய தியாகியாக மேற்குறித்த பெருமக்கள் மலர்ந்துவிடவில்லை. ஊண் உறக்கம் மறந்து, என்பு துலங்கப் பல காலம் 'தவம்' 'தவம்' என்று வாடியபின்தான் புத்தர் மலர்ந்தார். வெள்ளை அரசாங்கக் கொடுங்கோன்மை காட்டிய ஆற்றலையெல்லாம் தாங்கிப் பொறுமை காட்டிய வேதனையில்தான் மகாத்மா மலர்ந்தார். செக்கிழுத்து, கல்லுடைத்துச் கொள்ளை கொள்ளை சிறை இருந்த வேள்வி வேக்காட்டிலேதான் கப்பலோட்டிய தமிழன் மலர்ந்தார்.

தாங்கள் கொண்ட 'ஆசை' இப்படியெல்லாம் வேதனையைத் தரும் என்பதை அறிந்தே 'ஆசை'யைப் பற்றினார்கள். ஆசை பற்று எந்த அளவில் இருந்தாலும் எங்கே இருந்தாலும் அந்த அளவுக்கு ஏற்ற வண்ணம் துன்பத்தைத் தந்தே தீரும்.

> யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்.

என்பது திருக்குறள். விலகி இருக்க விலகி இருக்க வேதனை இல்லை என்றால், நெருங்கி இருக்க நெருங்கி இருக்க நோதல் பெருகும்தானே!

எனவே, ஆசை இருக்கிற இடத்தில் ஆசை இருக்குமளவிற்கு அல்லல் இருக்கத்தான் செய்யும். சுடச்சுடரும் பொன்போல் ஆளுமை மிளிர்கிறது என்பதெல்லாம் உண்மைதான். ஆசையால் துன்பம். ஆனாலும், புத்தரால் - மகாத்மாவால் - கப்பலோட்டிய தமிழனால் மனிதகுலம் நலம் பெற்றது என்பது உண்மைதானே? அவர்கள் கொண்ட ஆசைதானே முன்னேற்றத்தைத் தந்தது? எனவே ஆசைப்படுவது கூடாது

என்று சொல்வது தவறுதானே! வேண்டாமைதான் உயர்ந்த செல்வம் என்று வள்ளுவரே சொல்லியிருந்தாலும் மறுக்கவேண்டியது தானே! இப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

வளர்ச்சிக்கு - வளத்துக்கு ஆசையால் உந்தி எழும் தூண்டுதலே காரணமாக இருக்கிறது. எனவே, ஆசைப்படுங்கள், மேலும் மேலும் பேராசைப்படுங்கள். என்று உபதேசித்து, 'ஆசைநாயனார்' ஆகிவிடலாம் என்று ஆசைப்படத் தோன்றுகிறது.

ஆனால், சைவசித்தாந்தத்துக்கு ஒரு வள்ளுவர் போன்ற திருமூலரும் - *'ஆசை அறுமின்கள்'* என்று சொல்வதைக் கருத்திப்பார்க்க வேண்டியுள்ளது. 'உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவர்' என்று குறளாசிரியரைக் கல்லாடம் பாராட்டிப் போற்றுகிறது. *'சமயக் கணக்கர் மதிவழி கூறா'* வள்ளுவர் மட்டுமன்றி நந்தியம்பெருமான் வழிவந்த திருமூல நாயனாரும் 'ஆசை அறுமின்கள்' என்று தான் சொல்கிறார்.

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தம் ஆமே**

'வேண்டாமையே விழுச்செல்வம்' 'எது எதனைவிட்டு எந்தெந்த அளவுக்கு விலகியிருக்கிறோமோ அந்தந்த அளவுக்கு வேதனை இல்லை' என்று வள்ளுவர் சொல்வதையே தான் திருமூலர் கூறுகிறார். வள்ளுவரைவிட ஒரு படி மேலே சென்றும் திருமூலர் வற்புறுத்துகிறார். ஆம், ஈசனிடத்திலேகூட ஆசையை விட்டுவிட வேண்டுமென்கிறார் திருமூலச் சித்தர்.

ஆண்டவனிடத்திலேகூட ஆசை கொள்ளக்கூடாது என்றால், பத்திமை நெறியே பழுதுபட்டுப் போகுமே என்று நம் அறிவு தடை எழுப்புகிறது. ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்பதை ஏற்பதாக இருந்தால்,

**பற்றுக பற்றற்றான்**
**பற்றினை**

என்று சொன்ன வள்ளுவர் வாக்குப் பொய்பட்டுப் போகுமே! திருமூலர் ஏன் இப்படி ஓர் அறிவுரை கூறினார்?

ஆக, இன்னமும்கூட நம்முடைய பழைய ஐயம் அப்படியே நிற்கிறது. உலகியலிலே வளர்ந்து முன்னேறுவதற்கும் 'ஆசை' வேண்டியிருக்கிறது. ஆன்மிகத்திலே வளர்ந்து ஈடேறுவதற்கும் பத்திமை ஆகிய 'ஆசை' வேண்டியிருக்கிறது.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன் அடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தரல் வேண்டும்

என்று அப்பர் வரம் கேட்பது 'ஆசை' தானே!

பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்

என்று அம்மையார் வேண்டியது ஆசைதானே! அம்மையாரும் அப்பரும் காட்டிய வழிதானே அம்மையப்பர் 'ஆசை' வழி! எனவே, இம்மை வளம் காட்டும் உலகியலுக்கும் மறுமை வளம் காட்டும் ஆன்மிகத்துக்கும் 'ஆசை' தேவை என்று முடிவுகட்ட வேண்டியுள்ளது. அப்படியானால், வள்ளுவரும் திருமூலரும் ஆசையை ஏன் விடச் சொன்னார்கள்?

இந்தப் பூட்டுக்குச் சாவி வள்ளுவரிடமே இருக்கிறது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

இது குறள். உலகியற் பற்றுகளை அறவே துறப்பதற்கு உடையவன் தாளையே பற்றுக என்பது இதன் திரண்ட கருத்து. வைணவ சமயத்துக் குரவருள் நாயகமணியாகிய நம்மாழ்வார்

அற்றது பற்று எனின்
உற்றது விடு.

என்று கூறினார். எனவே, ஆன்மிகப் பற்று பக்தி என்ற ஆசையை ஏற்கலாம்போல் தோன்றுகிறது.

ஆனால், 'ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்' என்றல்லவா திருமூலர் சொல்கிறார்! 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன்' என்ற திருக்குறளின்படி பார்த்தாலும், கொள்ளும் 'ஆசை' ஈசனிடத்தே யாயினும் துன்பம்தான் இவ்வகையில் வள்ளுவர் கருத்துக்கும் திருமூலர் கருத்துக்கும் வேற்றுமை இல்லை என்றே கொள்ளவேண்டியுள்ளது.

ஆக, வள்ளுவர், திருமூலர், நம்மாழ்வார் எல்லாருமே 'ஆசை'யை விட்டுவிடச் சொல்கிறர்கள். அப்படியானால் உலகியலில் முன்னேறுவது எப்படி? ஆன்மிகத்தில்தான் ஈடேறுவது எப்படி? புத்தர், காந்தி, சிதம்பரனார் - இவர்களெல்லாம் 'ஆசை' கொண்டதால்தானே ஆளுமை மலர்ச்சி, ஆன்மிக வளர்ச்சி, மக்களுக்கு விடுதலை ஆகியவை விளைந்தன?

ஆசைப்படுவதைப் பாவம், தகாதது, விட்டுவிட வேண்டியது என்று ஏன் பெரியவர்கள் சொன்னார்கள்?

இந்தச் சிக்கலான வினாவுக்கு விடை இங்கே எடுத்துக்காட்டிய பெரியவர்களின் வாழ்க்கையிலேயே இருக்கிறது. அவர்கள் கொண்ட 'ஆசை' நாம் நினைத்துப் பற்றிக்கொள்ளும் 'ஆசை' அன்று. நாம் நினைக்கும் ஆசையெல்லாம் நம்மையே மையமாக வைத்துக்கொண்டு பார்க்கும் ஆசையாகும். நாம் நினைக்கும் ஆசை - நாம் பற்றும் ஆசை - நம்மைப்பற்றும் ஆசை தன்னலத்தின் மறுவடிவம். பெரியவர்கள் கொண்ட ஆசை தங்களை மறந்த ஆசை - தங்களைத் துறந்த ஆசை; பிறர் நலம் பேணும் ஆசை நம்முடைய ஆசை பாசத்தின் விளைவு; ஆன்மிக மலர்ச்சிக்குத் தடையாக உள்ள - ஆளுமை வளர்ச்சிக்குத் தடையாக உள்ள ஆசை. தாயுமானவர் பாடுவார்.

..............................

உள்ளதே போதும் நான்
நான் எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடலிலே வீழாமல் மனது அற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீது ஆணை செல நினைப்பது முதலான ஆசைகளெல்லாம், 'நான் நான்' எனக் குளறிப் பாசக்கடலுள் அழுந்தும் வழியாகும். 'நான்' என்பதை மையமாகக் கொள்ளாமல் பரந்து விரிந்து உயிர்க்குலத்தைத் தழுவுகின்ற பண்பினை 'ஆசை' என்று கருதுதல் தகாது. அதனை 'அருள்' என்று கொள்ளுதல் வேண்டும். தன்னல நாட்டம் ஆசை; உயிர்நல நாட்டம் பெரிய ஆசை என்று சொல்வது கூடத் தவறு. அசைப்பது (கட்டுவது) ஆசை (அசை > ஆசை) பிணிப்பை அறுப்பது அருள். இறைவனிடத்துக்கொள்ளும் 'பத்தி'யும் தன்னலம் நாடுவதாக இருப்பதுதவறு; அந்த நிலையைத்தான் 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்' என்று திருமூலர் குறிப்பிட்டார். 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்பதும் அதுவே.

உபதேச மந்திரத்தை – உயிர்க்கு

ஈடேற்றம் தரும் மந்திரத்தைத் தமக்கு நலம் செய்வதாக மட்டும் கொள்ளாமல். கோபுர மீது நின்று உலகவர்க்கு வெளிப்படுத்திய உடையவர் இராமானுசரின் செய்கையை இங்கே கருதிப்பார்க்கவேண்டும். ஆசை கடந்த (ஆசை, திசையென்னும் பொருளும் கொண்டது என்பதை மறவாதீர்கள்) அருள் இராமானுசரைப் பணிகொண்டதை நினைத்துப்பார்க்க வேண்டும்.

தூண்டுதல் தன்னலத்திற்காக இருக்குமாயின் 'ஆசை'; அந்தத் தூண்டுதல் பொதுநலத்துக்காக ஆன்ம நேய ஒருமைப் பாட்டுக்காக இருக்குமாயின் 'அருள்'

ஈசனிடத்தில் வேண்டுவதுகூட எதுவாக இருக்கவேண்டும் என்பதைப் பரிபாடல் குறித்திருக்கின்றது.

> .................................. யாஅம் இரப்பவை
> பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்
> அருளும் அன்பும் அறனும் மூன்றும்
> உருள்இணர்க் கடம்பின் ஒலிதாரோயே

பொருள், பொன், போகம் – தன்னலத்தைத் தூண்டிவிடுவன;

அருள், அன்பு, அறம் - இவை பொதுநலத்தை விளைப்பன. முன்னவை ஆசை; பின்னவை ஆசைக்குப் புதைகாடு.

முருகப்பெருமானே! கொத்தான கடம்பின் உருள்மாலை அணிந்தவனே! நின்பால் நாங்கள் வேண்டுவன (உலகிற்) பொருளோ, பொன்னோ, போகமோ அல்ல. எமக்கு ஆன்ம விடுதலை அளிக்கும் நின் அருளும், உன்பால் எம் உள்ளத்தே நிலவவேண்டிய அன்பும், இந்த இரண்டாலும் விளையும் அறமுமே வேண்டும்.

ஆசை, வரையறைப்பட்டது; தளைப்படு(த்து)வது. அருள் வரையறை மீறியது; எல்லையொன்றின்மை எனும் பொருளதனைக் காட்சிப்படுத்தித் தளையை நீக்குவது.

## *விதை நீரால் முளைத்தது*

நாயன்மார்கள் வரலாறு கதையாக இருத்தலினாலும் சேக்கிழர் வாக்கு ஆற்றொழுக்காகச் செல்வதாலும் பெரியபுராணம் எனக்குத் தெளிவாகப் புலப்பட்டது. என் ஆசிரியர் பாடம் சொல்லும் முறையினால் நான் அதை நன்றாக அனுபவித்துக் கற்று வந்தேன். பாடம் சொல்லி வரும்போது பிள்ளையவர்களிடமுள்ள சிவ பக்தித்திறம் நன்றாகப் புலப்பட்டது. அவர்களுடைய அந்தரங்கமான பக்தியைப் பெரியபுராணத்திலுள்ள செய்யுட்கள் வெளிப்படுத்தின. நான் அதைப் பாடம் கேட்ட காலத்தில் வெறுந்தமிழை மாத்திரம் கற்றுக்கொள்ளவில்லை; என்னுடைய மாதாமகர், தந்தையார் ஆகியவர்களது பழக்கத்தால் என் அகத்தே விதைக்கப்பட்டிருந்த சிவநேசமென்னும் விதை பிள்ளையவர்களுடைய பழக்கமாகிய நீரால் முளைத்து வளரத் தொடங்கியது.

உ.வே.சா. என் *சரித்திரம்*

# திருக்குறளில் அறிவியல் கூறுகள்

## புலால் மறுத்தலில் அறிவியல் செறிந்த அறிவியல் கருத்துகள்

*முனைவர்.மெ.மெய்யப்பன்.*

விலங்கினங்களை சைவ உணவு மட்டும் சாப்பிடுவன (Herbivores) அசைவ உணவு மட்டும் சாப்பிடுவன (Carnivores), இருவகை உணவுகளையும் சாப்பிடுவன (Omnivores) என்று மூன்று வகைப்படுத்தலாம். பரிணாம வளர்ச்சியில் சாப்பிடப்படும் உணவு வகைகளுக்கு ஏற்ப உடற்கூறுகளை ஒவ்வொரு விலங்கினமும் இயற்கையாகப் பெற்றிருக்கின்றன. வேண்டிப் பெற்ற உடற்கூறுகளுக்கு ஏற்ப அவைகள் உணவுப் பழக்க வழக்கங்களைக் கொள்ள வேண்டுமே ஒழிய விரும்பும் உணவுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப உடற்கூறுகளை மாற்றிக்கொள்ள முடியாது. உடற்கூறும், அதன் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய உணவுப் பழக்க வழக்கமும் இயற்கையால் ஏற்கனவே முன்திட்டமிடப்பட்டு விட்டதால், அதில் வேறுபட்ட மனித எண்ணங்களுக்குச் சிறிதும் இடமில்லை. மயக்கத்தின் காரணமாக இதில் மாற்றங்களை உட்புகுத்தினால், அவையாவும் இயற்கைக்குப் புறம்பானவைகளாகவே கருத வேண்டும். மனிதர்கள் புலால் உண்ணுதல் இத்தகையதே.

தொடக்கத்தில் சைவ உணவு மட்டும் சாப்பிட்டு வாழ்ந்த மனிதர்களில் பலர் இன்றைக்கு இருவகை உணவுகளையும் உண்ணும் விலங்கினமாக மாறி வருகின்றார்கள். இயற்கை ஒப்புதல் அளித்த உடலமைப்பைப் பெறாமலேயே இந்த உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் இதைப் பரிணாம வளர்ச்சியில் மனிதர்கள் பெற்ற உணவாகக் கருத முடியாது. சுவைமீது செயற்கையாக வளர்த்துக்கொண்ட பெரு விருப்பம் என்றே கொள்ளவேண்டும்.

மனிதர்கள் புலால் உண்ணுதல் இயற்கையால் வரையறுக்கப்பட்ட இயற்கையான வாழ்க்கை முறையன்று. இதைத்தக்க ஆதாரங்களுடன் ஒருவர் உறுதிப்படுத்த முடியும். மனிதர்களின் உடற்கூறுகளை, அசைவ உணவை மட்டும்

உண்ணும் விலங்கினங்களின் உடற்கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது விளங்கும். புலால் உண்ண உதவும் வகையிலான உடல் உறுப்புகளை இயற்கை நமக்களிக்கவில்லை. இயற்கையின் நியதி, மனிதர்கள் எப்போதும் சைவ உணவுண்ணும் விலங்கினமாக இருக்கவேண்டும் என்பதுதான்.

மனிதர்களுடைய விரல் நகங்கள் தட்டையாக உள்ளன. இரையாகும் விலங்கினங்களின் உடலைக் கிழிக்கக்கூடிய அளவிற்கு உறுதியாகவும், கூர்மையாகவும் இல்லை. பற்களுடைய அமைப்பும் அப்படியே. உடலுக்குப் போர்வை போல் அமைந்துள்ள, உறுதியான தடித்த தோலையும் உள்ளேயுள்ள சதைப் பகுதிகளையும் கடித்துத் துண்டாக்க உதவும் முன்வெட்டுப்பற்கள் மனிதர்களுக்கு இல்லை; கூர்மையான கோரைப் பற்களும் இல்லை. இருப்பினும் சுவையின் மீது மேற்கொண்ட பெரு விருப்பம் காரணமாக, இயற்கை தந்த உடற்கூறு இல்லையென்றாலும், செயற்கையான கொலைக் கருவிகளைப் பயன்படுத்தி மனிதர்கள் புலால் உண்ணும் பழக்கத்தை விரிவுபடுத்திக் கொண்டுவருகின்றார்கள். இதனால் அசைவ உணவு மட்டுமே உண்ணும் விலங்கினங்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அவற்றின் இனப்பெருக்கம் கூடப் பெரிதும் மட்டுப்படுத்தப் படுகின்றது. இடப் பெயர்ச்சி காரணமாக வாழ்க்கை முறையில் புதிய பழக்கங்களை அவைகள் வெளிப்படுத்த முயலுகின்றன. அவைகள் பெரும்பாலும் மனிதர்களுக்கு வலியப் பெற்ற இடையூறுகளாக அமைகின்றன.

விலங்கினங்களைப் போல இறைச்சியைப் பச்சையாகச் சாப்பிட்டுச் சீரணிக்கும் சக்தி மனிதர்களுக்கு இல்லை. வாயில் சுரக்கும் உமிழ்நீர் உணவில் உள்ள கார்போஹைட்ரேட் என்ற சக்கரைப் பொருளைப் பற்களால் கூழாக்கப்படும் பொழுதே ஓரளவு செமிக்க வைக்கும் தன்மை கொண்டதாக உள்ளது. மாமிசப் புரோட்டீன்களை உண்ணும் விலங்கினங்களுக்கு இதுபோன்ற சுரப்பு நீர் அவசியமின்மை காரணமாக வாயில் சுரக்கப்படுவதில்லை. இருவகை உணவுகளை உட்கொள்ளும் விலங்கினங்களுக்கும் இது போன்ற சுரப்பு நீர் சுரக்கப்படுவதில்லை.

அசைவ உணவு மட்டும் அல்லது இருவகை உணவுகளை உண்ணும் விலங்கினங்களுக்கு குடல் தொகுதி (Colon) குறுகிய நீளமுடையதாகவும், எளிய அமைப்புடையதாகவும் இருக்கின்றது. இதற்குக் காரணம் முக்கியச் சத்துப் பொருளான புரோட்டீன் தன்மயமாதலுக்கு நீண்ட குடலுறிஞ்சித் தொடர் அலைகளுக்குத் தேவைப்படுவதில்லை. உணவுப் பொருளைச் சிறுசிறு துகள்களாகப் பகுத்துத் தன்மயமாதலுக்கு ஏதுவாகப் பதப்படுத்தும் வழிமுறையில் இரைப்பையின் சுருங்கி விரியும் தன்மையும், அது உமிழும் ஹைட்ரோ குளோரிக் அமிலமும் (Hydrochloric acid) முக்கியமானதாகும். எல்லா வகையான விலங்கினங்களிலும் இரைப்பை சுருங்கி விரிதல் ஒத்த தன்மையுடையதாக இருப்பினும் அவை உமிழும் அமிலத்தில் வீரியத்தன்மை, சீரண சக்திக்கு ஏற்ப வேறுபட்டதாக இருக்கின்றது.

அமிலத் தன்மையை 'PH' என்று குறிப்பிடப்படுகின்ற அலகில் எண் அளவால் மதிப்பிடுவார்கள். இதன் மதிப்பு 0-14 என்ற நெடுக்கையில் இருக்கும். தூய நீர் அமிலமும் இல்லை, காரமும் இல்லை. இதன் 'PH' மதிப்பு 7. அமிலங்களின் 'PH' மதிப்பு அமிலத்தன்மைக்கு ஏற்ப 7ஐ விடக் குறைவாக இருக்கும். காரங்களுக்கு இதன் மதிப்பு 7ஐ விட அதிகமாக இருக்கும். அசைவ உணவுண்ணும் விலங்கினங்களின் இரைப்பையில் அமிலத்தன்மை மிகவும் அதிகம்.

சைவ உணவு மட்டும் உண்ணும் பெரும்பாலான விலங்கினங்களுக்குக் குடல் தொகுதி சுற்றி வைக்கப்பட்ட நூற்கண்டு போல நீண்டு நெடியதாக இருக்கும். மேலும் அவற்றின் இரைப்பையில் அமிலத்தன்மை 4-5 'PH' என்ற நெடுக்கைக்குள் அமைந்திருக்கின்றது. எனவே மனிதர்கள் அசைவ உணவு உண்பது என்பது உண்ணும் உணவிற்கும், உடலில் சுரக்கும் சீரண நீருக்கும் ஒரு தொடர்பை முன்கூட்டியே திட்டமிட்டு நிலைப்படுத்தி வைத்திருக்கும் இயற்கையின் விதிமுறையை மீறிய உணவுப்பழக்கமேயாகும்.

இதைச் சத்துணவு வல்லுநர்களும் சுட்டிக் காட்டியிருக்

கின்றார்கள். பெரும்பாலான கார்போஹைட்ரேட்டுகள் நீரில் கரைவன. ஆனால் புரோட்டீன்கள் சிறிதும் கரைவதில்லை புரோட்டீன்கள், கார்ப்போஹைட்ரேட்டைவிட உறுதியானவை. அவற்றைச் சிதைத்துப் பகுப்பது அவ்வளவு எளிதில்லை. அதனால் சீரணத்தின் போது, இரைப்பையில் சுரக்கப்படும் சீரண நீரின் அமிலத்தன்மை அசைவ உணவு உண்ணும் விலங்கினங்களுக்கு அதிகமாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

சீரணிக்கப்பட்ட உணவு கூழாக நீண்ட குடல் வழியாகச் செல்லும்போது அங்குள்ள குடலுறிஞ்சிகள் மூலமாகச் சத்துப் பொருட்கள் உறிஞ்சிக்கொள்ளப்பட, எஞ்சியவை கழிவாக வெளியேறுகின்றன. கழிவுப்பொருட்கள் இறுகிப்போய் மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்க உணவில் நார்ப்பொருள் (Fiber foods) இருக்க வேண்டியது அவசியமாகிறது. இந்தப் பொருள் சீரண நீரால் பகுக்கப்படுவதில்லை. அதனால் கழிவோடு கழிவாக வெளியேறுகின்றன. இதற்கு மாறாக மாமிச உணவுகளை உட்கொண்டால், அவை இரைப்பையின் குறைவான அமிலத்தன்மையால் அரைகுறையாகச் சீரணிக்கப்பட்டு குடலுக்குள் தள்ளப்படுகின்றன. நீண்ட குடல் வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால், நீண்ட நேரம் குடலில் தங்கி, கழிவாக வெளியேற்றப்படுவதற்கு முன்னரே அழுகிப்போய் விடுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன. அப்போது ஒருவகையான நச்சுப்பொருளை உற்பத்திசெய்து உடல் நலத்திற்கு மெலினமாய் ஒரு கெடுதலைச் செய்து விடுகின்றது.

அசைவ உணவுண்ணும் விலங்கினங்கள் தங்களுடைய மோப்ப சக்தியால் நீண்ட தொலைவில் உள்ள இரையின் இருப்பிடத்தை அறிந்துகொள்ளும் திறனைப் பெற்றிருக்கின்றன. மனிதர்களுக்கு அப்படிப்பட்ட திறன் இல்லை. விலங்கினங்களுக்கு இருப்பதைப்போல இரையை வேட்டையாடுவதற்கு ஏதுவாக வேகமாக இயங்கக்கூடிய உடல்வாகும் இல்லை.

*இன்னும் வளரும்*

# கரும்பு அயிரக் கூலி கொடுக்கும் குலத்தோன்றல்

விருத்தாசல ரெட்டியார் எங்களுக்காக ஒரு சாகை ஏற்படுத்தி அதில் இருக்கும்படி செய்து, உணவுப் பொருள்களையும் வேண்டிய அளவு முன்னதாக அனுப்பி, செலவுக்குப் பணமும் கொடுத்து ஆதரித்தார். ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் தவறின்றி இரண்டு கல நெல்லும் இரண்டு ரூபாயும் அனுப்பிவிடுவார்.

செங்கணத்தில் நாட்டாண்மைக்காரரில் விருத்தாசல ரெட்டியார் சின்னப் பண்ணையார் என்னும் பகுப்பினர்.

நான் விருத்தாசல ரெட்டியாரிடம் காரிகை பாடம் கேட்ட காலத்தில் அவருக்குச் சற்றேறக் குறைய ஐம்பத்தைந்து பிராயத்திற்கு மேல் இருக்கும். அவருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர்.

விருத்தாசல ரெட்டியார் குட்டையான வடிவினர். கறுப்பு நிறத்தினர். தேகம் பள பளப்பாக இருக்கும். எப்பொழுதும் சுத்தமாக இருப்பார். காலை ஐந்து மணிக்கு எழுவார். ஊரைச் சுற்றிலும் காடுகளும் நீரூற்றமும் மணற் பரப்புமுள்ள ஓடைகளும் உண்டு. ஏதேனும் ஒரு பக்கம் சென்று தந்த சுத்தி முதலியவற்றை முடித்துக்கொண்டு ஏழு மணிக்கு வீட்டிற்கு வருவார். கால் கையைச் சுத்தம் பண்ணிக் கொள்வதற்கும் முகத்தைச் சுத்தம் பண்ணிக் கொள்வதற்கும் அரை மணி நேரம் பிடிக்கும். பிறகு திருநீற்றை உத்தூளனமாக இட்டுக் கொண்டு படிக்கத் தொடங்குவார். பதினோரு மணி வரையிற் படித்துக் கொண்டேயிருப்பார். படிக்கும் நூல்களிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஆழ்ந்து படித்துச் சிந்தித்துச் செல்வார். மத்தியான உணவுக்குப்பின் இரண்டு மணி முதல் இராத்திரி எட்டு மணிவரையில் படித்துக்கொண்டே இருப்பார். படிப்பதில் அவருக்குச் சலிப்பே தோற்றாது. இரவில் போஜனம் ஆனபிறகு தம்முடைய மூத்த குமாரராகிய நல்லப்ப ரெட்டியாருக்குக் கம்பராமாயணப் பாடம் சொல்வார். அவர் பேச்சு மிகவும் திருத்தமாக இருக்கும்.

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே பெற்றிருந்தமையின் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அடிக்கடி யாரேனும் அயலூரிலிருந்து வந்து இரண்டொரு நாள் தங்கி அவரிடம் சம்பாஷித்துச் செல்வார்கள்.

அவர் கன்னையரென்னும் வீர சைவரிடம் பாடங் கேட்டவர். வீர சைவர்களுக்கும் ரெட்டியார்களுக்கும் ஒற்றுமையும் நட்பும் அதிகமாக இருந்தன. வீர சைவ வித்துவ சிகாமணியாகிய துறை மங்கலம் சிவப் பிரகாசரை அண்ணாமலை ரெட்டியார் என்னும் செல்வர் ஆதரித்துப் பாதுகாத்த வரலாற்றை அவ்விரு வகையினரும் அடிக்கடி பாராட்டிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். தவபிரகாச சுவாமிகள் பழகிய இடங்களையும், அவர் நீராடும் பொருட்டு அமைக்கப் பெற்ற நடை வாவிகளையும் நான் பார்த்திருக்கிறேன்.

பல தமிழ் ஏட்டுச் சுவடிகளையும் அச்சுப் புஸ்தகங்களையும் விருத்தாசல ரெட்டியார் தொகுத்து வைத்திருந்தார். எழுதாத அநேக ஏட்டுச் சுவடிகளை ஸித்தமாக வைத்திருப்பார். தம்மிடம் இல்லாத அரிய தமிழ் நூல்கள் கிடைத்தால் அவற்றில் எழுதிக்கொள்வார். ஏட்டுச் சுவடியில் விரைவாகவும் நன்றாகவும் எழுதுவார். எனக்காகச் சில தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடியில் எழுதித் தந்திருக்கிறார். சில சமயங்களில் நானும் அவரும் ஒரே சமயத்தில் ஒரு நூலைப் பிரித்துக்கொண்டு தனித்தனியே பிரதி பண்ணுவோம்.

படித்தலும், பாடம் சொல்லுதலும், வந்தவர்களிடம் சம்பாஷணை செய்தலுமின்றி வேறு ஒரு காரியத்திலும் அவர் புத்தியைச் செலுத்துவதில்லை. மிகுதியான பூஸ்திதி உள்ளவர் அவர். அவற்றை அவருடைய பிள்ளைகளும் காரியஸ்தருமே கவனித்துவந்தனர். இவ்வாறு அவர் இருத்தலில் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் மிக்க வருத்தம் இருந்தது. அதனை ரெட்டியார் உணர்ந்தும் சிறிதும் கவலை கொள்ளவில்லை.

உ.வே.சா. என் சரித்திரம்

# தமிழ் செவ்வியல் மொழி இனி என்ன.....

*பேராசிரியர் முனைவர் நா.இராமமூர்த்தி*

அமெரிக்க நாட்டு அறிஞர் ஜார்ஜ் எல் ஹார்ட் என்பார் கலிபோர்னியா பல்கலைக்கழக வெளியீட்டில், உலகச் செவ்வியல் மொழிகளில் மிகச்சிறந்த இலக்கியங்கள் உள்ள பழைமையான மொழி தமிழ் எனத்தம் கருத்தை எழுதியிருப்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

இந்திய விடுதலைக்கு முன்பும் தமிழ்மொழியைப் பேணிக்காக்க அன்றைய அந்நிய அரசு முன் முயற்சியும் எடுக்கவில்லை; விடுதலை நாட்டிலும் அரசு தமிழ்மொழியைப் போற்றி வளர்க்க எந்தவொரு சீரிய நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வருந்தத்தக்கது.

ஒரு மொழிக்கொள்கை சீனா போன்ற நாடுகட்குப் பொருந்தும். இந்தியா போன்ற பல மொழிகள் வழங்கக்கூடிய நாட்டில் தமிழ்போன்ற சிறந்த மொழி அரசு மொழியாக அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் பெருமகனாரால் தமிழ்மொழி செவ்வியல் மொழி என அறிவித்தது இந்திய நாட்டின் மக்களாட்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்த அறிவிப்பு உலக அளவில் உள்ள தமிழ் பேசும் 6கோடி மக்களின் பொறுப்பை அதிகப்படுத்தியுள்ளது. தமிழ் மொழியின் பழைமையான இலக்கியச் செழுமையையும் பயன்பாட்டையும் பண்பாட்டு மேம்பாட்டையும் உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அறிஞர் பெருமக்கள் சோம்பல் துயில் நீக்கி அரிதின்முயன்று தமிழின் செவ்வியல் மாண்பை உலகறியச் செய்தல் வேண்டும்.

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீசியசு, மாலத்தீவுகளில் வாழும் தமிழர்கள் ஏற்கனவே முயன்று போற்றிவரும் தமிழ்

வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதோடு அவர்கள் கைக்கும் கருத்துக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் தமிழ்ப் பரப்பும் முயற்சியை இங்குள்ள தமிழர்கள் முன் கை எடுத்து முயல வேண்டிய கடப்பாடு முன்நிற்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா போன்ற அயல் மண்ணில் தமிழ் புலம் பெயர் மக்கள் வேலை நிமித்தமாக அறிவுத்துறைகளில் பணியாற்றிவருவது இந்த நேரத்தில் மகிழ்ச்சிதரும் உண்மையாகும். அறிவுத்துறைகளில் பணிபுரியும் அவர்களுடைய செல்வாக்கும் அதன் வீச்சும் நம்முடைய தமிழ் செவ்வியல் மொழி என்னும் கோட்பாட்டை ஐக்கிய நாடுகள் பண்பாட்டுமையத்தின் செவியில் சென்று சேர்வதற்கு நம்மவர்களுக்கு வளமிக்ககருத்துக்கள் சென்றடைய நம்நாட்டு தொடர்பு சாதனங்கள் செம்மையாக இயங்குதல் வேண்டும். அவற்றின் நிலை இன்று தரம் தாழ்ந்து இருப்பது வருந்தத்தக்கது. நம்முடைய கருத்து இந்தவகையில் நாமிருக்கும் நம் வீடாகிய நாட்டைச் செப்பம் செய்தால் செவ்வியல் மொழியின் வீச்சும் உலகம் முழுவதும் சென்றடையும் என்று நம்பலாம்.

முன்இதழ்த் தொடர்ச்சி

# செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்த திருப்பதிகள்.

*திரு. சதாசிவபண்டாரத்தாரவர்கள்,*
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

II

சிவனடியார் அறுபத்துமூவருள் புகழ்த்துணைநாயனார் என்பவரும் ஒருவர். இவர் செருவிலிபுத்தூரில் ஆதிசைவமரபிலே தோன்றிச் சிவபெருமானை முறைப்படி அருச்சித்துவரும் நாட்களில், கொடியபஞ்சம் உண்டாக, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தளர்ச்சியுற்றநிலையிலும் தம் தொண்டினைக் குறைவறச் செய்து கொண்டு வந்தனர். நாள்தோறும் வறுமையால் மெலிவுற்றுவந்த புகழ்த்துணையார் ஒருநாள் சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாட்டும்போது அவ்விறைவன் திருமுடிமீது திருமஞ்சனக்குடத்தை உடற்றளர்ச்சியினால் தாங்க முடியாமல் போட்டுவிட்டார். உண்மைத் தொண்டராகிய இவ்வடிகளது வறுமை ஒழியுமாறு பஞ்சம் நீங்கும்வரையிற் சிவபெருமான் நாள்தோறும் இவருக்கு ஒருபொற்காசு அளித்துவந்தனர். படிக்காசுபெற்ற புகழ்த்துணையார் இறைவன் திருவருளை நினைந்துநினைந்து மனம் உருகித் தம் திருத்தொண்டை முட்டின்றிச் செய்துவந்தார். பஞ்சமும் நீங்கிற்று, எந்நாளும் தம் திருத்தொண்டை வழாது புரிந்துவந்த இவ்வடிகள் இறுதியில் சிவபதம் எய்தினர். இவ்வரலாற்றைப் பெரியபுராணத்தில் காணலாம்.

திருத்தொண்டர்திருவந்தாதியின் ஆசிரியராகிய நம்பியாண்டார்நம்பியும், பெரியபுராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழாரடிகளும், புகழ்த்துணைநாயனார் அவதரித்துத் தொண்டுபுரிந்து இறைவன் திருவடியையடைந்த திருப்பதி செருவிலிபுத்தூர் என்று தம் நூல்களிற் கூறியுள்ளனர்.

இதனை,

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியா
தருவரை வில்லி அருளின் நிதியது பெற்றனனே.

(திருத்தொண்டர் திருவந்தாதி - பா.67)

செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளிதனக் சுகத்தடிமையாமதனுக்
கொருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும்பெயரார்.

(பெரிபுராணம், புகழ்த்துணைநாயனார் புராணம் -பா.1)

என்ற பாடல்களால் இனிதுணரலாம். புலவர் பெருமான்களாகிய இவ்விருவரும் இங்ஙனம் கூறியிருக்க, சந்தானாசாரியருள் ஒருவராகிய கொற்றங்குடி உமாபதிசிவனார் தாம் இயற்றியுள்ள திருத்தொண்ட புராணசாரத்தில் புகழ்த்துணையாரது திருப்பதி அழகார் திருப்புத்தூர் என்று குறித்துள்ளனர்.* எனவே, செருவிலிபுத்தூர்க்கு அழகார் திருப்புத்தூர் என்ற பெயரும் உண்டு போலும். ஆனால் செருவிலிபுத்தூர் என்ற பெயருடைய ஊர் இந்நாளில் யாண்டும் காணப்படவில்லை. நாயன்மார்கள் அவதரித்தருளிய

---

*"புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்புத்தூர்வாழ் புகழ்த்துணையார்
அகத்தடிமைப் புனிதர் சின்னாள்
மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால் வருந்துடலம்
நடுங்கிடவு மணிநீ ரேந்தி
அண்ணல்முடி பொழிகலசம் முடிமேல் வீழ அயர்ந்தொருநாள்
புலம்பவரன் அருளா லீந்த
நண்ணலரும் ஒருகாசுப் படியால் வாழ்ந்து நலமலிசீர்
அமருலகம் நண்ணி னாரே."

(திருத்தொண்டர் புராணசாரம் - பா.61)

திருப்பதிகளை யாவரும் அறிந்து கொள்ளுமாறு மிகத் தெளிவாகக் கூறிச்செல்வது சேக்கிழாரடிகள்பாற் காணப்படும் தனிச்சிறப்புக்களுள் ஒன்றாகும். இவ்வுண்மையை, ஆனாயநாயனாரது திருப்பதி மேல்மழநாட்டிலுள்ள ஆதனூர் எனவும், குறும்பநாயனாரது திருப்பதி மிழலைநாட்டுப் பெருமிழலை எனவும், அடிகள் கூறியிருத்தலால் நன்கறியலாம். இத்தகையார் புகழ்த் துணையாரது திருப்பதியாகிய செருவிலிபுத்தூர் எந்நாட்டில் உள்ளது என்பதை உணர்த்தாமைக்குக் காரணம் புலப்படவில்லை. இந்நிலையில், உமாபதிசிவனார் அஃது அழகார் திருப்புத்தூர் என்று எவ்வாறுணர்ந்தனரென்பது ஆராய்தற்குரியதொன்றாம்.

இனி, ஏழாந்திருமுறையில் புகழ்த்துணையார்வரலாற்றைக் கூறும் பாடல் ஒன்றுளது. அது சைவசமயகுரவராகிய சுந்தர மூர்த்திசுவாமிகள் அருளிய அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகத்திலுள்ளது. அஃது,

அகத்தடிமைசெய்யுமந்தணன் தான் அரிசிற்புனல் கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக் குடத்தையுநும் முடிமேல்விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்குநித் தற்படியும் வருமென்றொருகாசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச்செய்து கந்தீர் பொழிலார்திருப்புத்தூர்ப் புனிதனீரே.

என்பதாம். இப்பாடலில் கூறப்பெற்றுள்ள புத்தூர் அரிசில் என்னும் ஆற்றின் தென்கரையிலிருத்தலால் அரிசிற் கரைப்புத்தூர் என்ற பெயரையும் எய்தியுள்ளது. அன்றியும், இதனை அழகார் திருப்புத்தூர் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழங்கியுள்ளனர் என்பது, 'அரிக்கும் புனல்சேர் அறிசிற்றென்கரை அழகார்திருப்புத்தூர் அழகனீரே' என்னும் அவ்வடிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றது. எனவே, புகழ்த்துணையாரது திருப்பதி அழகார் திருப்புத்தூர் என்று உமாபதிசிவனார் தம் திருத்தொண்டர்புராண சாரத்தில் குறித்தமைக்குக்காரணம் சுந்தரமூர்த்திசுவாமிகளது அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகமேயாகும். இந்நாளில், அழகார்

திருப்புத்தூர் என்பது அழகாந்திரிப்புத்தூர் எனவும் அழகாப்புத்தூர் எனவும் வழங்கப்படுகின்றது. இது கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் மூன்றுமைல் தூரத்தில் குடவாயிலுக்குச் செல்லும் பெருவழியில் அரிசில் ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது. இத்திருப்பதியில் அவதரித்துத் திருத்தொண்டுபுரிந்து இறைவன்பாற்படிக்காசுபெற்ற புகழ்த்துணையாரைத் தம்பதிகத்தில் வைத்துச் சிறப்பித்துள்ள சுந்தரமூர்த்திசுவாமிகள் 'அரிசிற்புனல் கொண்டு வந்தாட்டுகின்றான்' என்று அரிசிலாற்றையும் குறித்திருப்பது உணரற்பாலதாம். திருஞானசம்பந்தசுவாமிகளும் தமது அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகத்தில்,

'அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே'

என்று புகழ்த்துணையார் இத்தலத்திற்செய்த திருத்தொண்டைப் பாராட்டியுள்ளார். ஆகவே, சைவசமய குரவர்களாகிய திருஞான சம்பந்தராலும், சுந்தரமூர்த்திகளாலும், குறிக்கப்பெற்றதும் இக் காலத்தில் அழகாப்புத்தூர் என்று வழங்கப்படுவதும் ஆகிய அரிசிற்கரைப்புத்தூரே அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய புகழ்த்துணைநாயனாரது திருப்பதி என்பது நன்குவிளங்குதல் காண்க.

-செந்தமிழ்த் தாகுதி 48

# தமிழும் மலையாளமும்

எஸ்.வையாபுரிப்பிள்ளை
(திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறையில் பேராசிரியர்)

## முன்னுரை:

திருவிதாங்கூர் கொச்சி ஐக்கியநாட்டிலே வழங்கிவரும் மொழிகளில் மிகமுக்கியமானவை மலையாளமும், தமிழுமாம். இவ்விரு மொழிகளுக்குமுரிய உண்மையான தொடர்புபற்றிப் பல அறிஞர்கள் நெடுங்காலமாக ஆராய்ந்துள்ளார்கள். எனினும் இம்மொழித் தொடர்பு பற்றிய முடிவு ஐயத்திற்கிடமின்றி நன்கு துணியப்பெறாமலே இருக்கிறது. பலரும் பல்வேறு முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். நடுநிலையினின்று இப்பொருளோடு தொடர்புள்ள எல்லா விசயங்களையும் கவனித்து ஆராய்ச்சி செய்வது திராவிடமொழி ஆராய்ச்சியாளரது கடமையாம். இக்கடமையை மேற்கொண்டே இம்முயற்சி இங்குச் செய்யப்படுகிறது.

## தமிழ்மொழிச் சரிதம்

தமிழ்மொழியின் சரிதத்தை நோக்கினால் அது மூன்று நிலைகளை அடைந்துள்ளதெனத் தெரிகிறது. அவை பண்டைத் தமிழ் நிலை, இடைக்காலத் தமிழ்நிலை, தற்காலத் தமிழ்நிலை என்பன. பண்டைத் தமிழைச் சங்க இலக்கியங்கள் கொண்டும், தொல்காப்பிய இலக்கணங்கொண்டும் அறியலாம். இடைக்காலத் தமிழைத் தேவாரம், திவ்யப்பிரபந்தம், சிந்தாமணி முதலிய இலக்கியங்கள் கொண்டும், வீரசோழியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள் கொண்டும் அறியலாம். தற்காலத் தமிழ் நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கொண்டும், பேச்சு வழக்குத் தமிழ்கொண்டும் அறியவேண்டியதாயுள்ளது. இம்மூன்று நிலைகளும் சொற்கள் பற்றியும் (Vocabulary), சொல்வடிவம்பற்றியும் (Word-forms), ஒலிமாற்றம்பற்றியும் (Sound-changes), சொற்களின் அமைதிபற்றியும் (Morphology), சொற்பொருள் பற்றியும் (Semantics), மொழிநடைபற்றியும் (Style),

செய்யுள் அமைதிபற்றியும் (Metre) தம்முள் பெரிதும் வேறுபடுகின்றன.

இம் மூன்று நிலைகளில் எந்நிலையோடு பிராசீன மலையாளமொழி ஒத்துத் தொடர்புடையதாய் நிற்கிறது? உதாரணங்கள் மூலமாக இதனை ஆராய்தல் வேண்டும்.

## பிற்காலச் சொற்கள்

முதலாவது சில சொற்களை நோக்குவோம். பிரான், சிரி, தங்கம் என்ற சொற்கள் பண்டைத்தமிழிற்கிடையா. முதலிரண்டு சொற்கள் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் அருகித் தோன்றி அக்காலத்தின் இறுதியிலுள்ள இலக்கியங்களில் சற்று மிகுதியாய்க் காணப்படுகின்றன. "பிரான்" அப்பர் தேவாரத்திலும் (5:20, 8) திருவாய் மொழியிலும் (1,7,6) வருகிறது. "குமிண்சிரிப்பும்" என அப்பரும் (4,81,4), "உன்னடியார் குனிப்பார் சிரிப்பார்" என்று மாணிக்கவாசகரும் (495) வழங்கியுள்ளார்கள். இச்சொற்கள் ராம சரிதம் (35-2) முதலிய பிராசீன மலையாள இலக்கியங்களில் காணப்படுகின்றன. "தங்கம்" மிகமிகப் பிற்பட்ட சொல். 16ம் நூற்றாண்டில் தோன்றிய சூடாமணிநிகண்டிற்கூட இச்சொல் காணப்பெறவில்லை. "தங்கத்தானை" என்று பிள்ளைப் பெருமாளையங்கார் பாடுகின்றார். மலையாளத்தில் "நளசரிதம்" என்ற நூலில் இச்சொல் வருகிறது. பொதுப்படநோக்கினால் மலையாளப் புராதன இலக்கியங்களில் காணும் சொற்களில் பெரும்பாலனவும் இடைக்கால, பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளனவேயாம்.

தொடரும்

பதிப்பாசிரியர்.

## பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116